வீடுகள் கட்டுவதற்குக் கடன் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுக்க வேண்டியது மிக முக்கியமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவனந்தம் : தலைவரவர்களே, கேள்வியே கிராமப் புறங்களில் தனித்தனி வீடுகள் கட்டுவது பற்றித்தான்.

கன்னியாகுமரி மாவட்டத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா எண். 724— திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குமரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களுக்கு குறைந்த பட்சர் கூலி அமுலாக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

ஆம்.

திரு. தே. ஞானசிகாமணி பேரவைத் தலைவர் அவர்களே அங்கே இருக்கிற தேயிலைத் தோட்டங்களில் காரைமடை, பால் மோர், தேவகிரி ஆகிய தோட்டங்களில் டெண்டர் ரூ. 3.50 சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. அங்கே பிளாண்ட்டேஷன் லேபர் ஆக்ட் அமுலாக்கப்படுவதில்லை. ஆகவே இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே குறைந்த பட்ச சம்பளம் 18—11—76ல் கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. 1—12—76 முதல் அதுஅமுலில் வந்திருக்கிறது. அதை செயல் படுத்துவதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அதைச் செயல்படுத்துவதில் தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.—பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பதில் தரும் போது குறைந்த பட்சம் சம்பளம் அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். குறைந்த பட்சம் சம்பளம் எவ்வளவு? அந்தக் கூலி எல்லாத் தோட்டங்களிலும் கொடுக்கப்படுகிறதா? கொடுக்கப் படாத தோட்டங்கள் பற்றி புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் முதலில் சொன்னேன். 18—11—76ல் கெஜட்டில் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் வாங்கிப் படிக்கலாம். இல்லை என்றால் இன்னும் 2, 3 நாட்களுக்குள் எல்லா அங்கத்தினர்களுக்கும் அச்சிட்டுக் கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதைத் தருவதற்கு தயாராக இருக்கிறேன். அதைப் படிப்பது என்றால் நேரமாகும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே! அந்தத் தோட்டங்கள் குறைந்த ஏக்கரேஜ் இருந்தால் இந்த பிளாண்ட்டேஷன் லேபர் ஆக்ட் நாட் அப்ளிகபல் என்று இருக்கிறது. அதனால் ஏற்கனவே நிறைய ஏக்கரேஜ் வைத்திருப்பவர்கள் அதைக் கொஞ்சம் கொஞ்சம் ஆக பிரித்து பினாமியில் வைத்து இந்தச் சட்டத்தை மோசடி செய்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தை திருத்துவது அவசியம். இந்த மன்றத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தை போட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அதற்காக எந்த எந்த தோட்டத்தை கொண்டு வந்து அமுல்படுத்த முடியும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். சி.ஐ.டி.யு. வைச் சேர்ந்த தொழிலாளர்கள் பிரதிநிதியும் கொண்ட அந்தக் குழு பரிந்துரை வழங்க பரிசீலனை செய்து சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம்.

திரு. துரை முத்துசாமி: ஆன் ஏ பாயின் ஆப் ஆர்டர் குறுகிய கால வினா என்று 1978–79, 1979–80ல் தமிழ்நாடு அரிசனங்களுக்காக வீடுகள் கட்டப்படும் திட்டத்தைப் பற்றி கேட்டிருந்தேன். அதை நீங்கள் சாதாரண கேள்வியாக எடுத்துக்கொண்டதாக கேள்விப்படுகிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி என்னிடம் கேளுங்கள். நான் பார்த்துச் சொல்கிறேன்.

வடதலைக்குளத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

*வினா எண். 725—திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் வடதலைக்குளம் அரிசன காலனியில் 'தாட்கோ' மூலம் புதிய கல் வீடுகள் கட்ட அனுமதித்து கடந்த 20—10—76-ல் கடலூர் நெடுஞ்சாலை பணித்துறை மூலம் டெண்டர் விடப்பட்டு இது நாள் வரை வீடுகள் கட்டப் பெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?